142

REGD. NO. M. 2714.

விவேக சக்தி.

THE VIVEKA SAKTHI.

THE MONTHLY ORGAN OF THE
TAMIL NADU YOUNG MENS' JAINA ASSOCIATION.
Hon. Editor :—M. CHAKRAVARTHI.

மலர் 1 / Vol 1 — 1931வது அக்டோபர்மீ — பிரஜோற்பத்திவது ஐப்பசிமீ — இதழ் 4 / No. 4

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	ஸ்ரீ ஆதிநாதர் பிள்ளைத்தமிழில் ஒரு பாட்டு ...	33
2.	பொருளாதார முன்னேற்றத்துக்கு மார்க்கங்கள் யாவை?	34
3.	ஜைனமதத்தின் தற்கால நிலைமை	36
4.	நிட்டமில்லாத வேலை	37
5.	சமவசரணப் பதிகத்தில் ஒரு பாட்டு	37
6.	திருமேற்றிசையந்தாதி	38
7.	இந்தியாவிலுள்ள ஜனத்தொகை	42
8.	மதிப்புரை	43
9.	ஜைனமத நூல்கள்	44
10.	நமது ஆகாரம்	47
11.	உலகச் செய்திகள்	47
12.	பத்திரிகாசிரியர் குறிப்புகள்	48

ஆரணி
அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1931.

"விவேக சக்தி"

[தமிழ்நாடு ஜைனவாலிபர் சங்கத்தினின்றும் வெளிவரும் மாதப் பத்திரிகை]

1. நமது பத்திரிகை ஜூலை மாதமுதல் ஒவ்வொரு மாதமும் கடைசி தேதியன்று வெளியாகும். சந்தாதேயர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலை மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு, அதுவரையில் சேர்ந்த இதழ்களையும் சேர்த்து அனுப்பப்படும்.

2. சந்தாத்தொகைக்குப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்பமுடியாதாதலால் சந்தாதாரராகச் சேர்வோர் முன்னதாகவே மணியார்டர் செய்துவிடவேண்டும்.

3. போஷக சந்தாதாரர்களாகச்சேரும் கனவான்கள் சந்தாத் தொகையை மணியார்டர்செய்து, தம்முடைய முழுவிலாசத்தைத் தெரிவித்தால் அவர்களுடைய பெயரைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

4. தமிழ்நாடு ஜைன வாலிபர் சங்கத்தக்குக் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தியோர், சங்கங்களின் நடவடிக்கைகளை எழுதி கபக்கு அனுப்பினால் அவைகளைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

5. பத்திரிகைக்கு வியாசம் எழுதுவோர், யுக்தி அனுபவங்களுக்கொவ்வாத கதை முதலிய சரிதங்களை எழுதாமல், கூடியவரையில், வாழ்க்கையின் உயர்வுக்கு ஏற்ற விஷயங்களையே செந்தமிழ்நடையில், காகிதத்தின் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதியனுப்பவேண்டும்.

சந்தா விவரம்.

1.	ஜைனவாலிபர் சங்கத்தில் அங்கத்தினரான ஜைனவாலிபர்களுக்கு வருடச்சந்தா	0–12–0
2.	சங்கத்தில்சேராத இதரர்களுக்கு வருடச்சந்தா	1–0–0
3.	பத்திரிகையின் அபிவிருத்தியைக்கோரும் கனவான்களுக்குப் போஷகர் சந்தா	10–0–0

விளம்பர விதம்

		1 மாதம்	3 மாதம்	6 மாதம்	1 வருஷம்
1.	முழுப்பக்கம்	5–0–0	12–8–0	20–0–0	35–0–0
2.	அரைப்பக்கம்	2–1–0	7–0–0	10–8–0	17–0–0
3.	கால்பக்கம்	1–8–0	4–0–0	6–8–0	12–0–0

விலாசம்:—மானேஜர், விவேகசக்தி ஆபீஸ்,
குழப்பலூர் போஸ்டு, ஆரணி மார்க்கம்.
Kolapalur, P. O. (Via) Arni, (N. A. Dt.)

விவேகசக்தி

கௌரவ பத்திரிகாசிரியர்--மே. சக்கரவர்த்தி

தொகுதி 1 } 1931-ம் வரு அக்டோபர்மீ : பிரஜோத்பத்திவரு ஐப்பசிமீ { பகுதி 4

ஸ்ரீ ஆதிநாதர் பிள்ளைத் தமிழில்

ஒரு பாட்டு.

அருப சொருபமுடன் அளவி லொளி பரவும்
அமல விமல குணன் வருகவே !
அருக சிகன் வருக ! அயில்களின வருக !
அமரர் பரவு பதன் வருகவே !
செருவில் விழமறலி மதனன் வினைக ளுடன்
சிதற யிடறு பதன் வருகவே !
சிறைசெய் கொலைபொய் களவுகளு மெனமொழியுஞ்
சுருதி மறைவழியின் வருகவே !
சொருப வனிதையர்கள் பரத நடன மிட
சுரர்கள் தருவினிசை பயிலவே
சுமூட ரறிவுபெற வனச மலர் பொழிய
சுதைகள் பிணியகல வொளியிலா
குருடர் விழிகள்பெற மூடவர் நடைகள் பெற
குலவு மெயிலிறைவன் வருகவே !
குறியில் பரசமய விருளை யெறியுகதி
ருதய குருசில் பதன் வருகவே !

—வருகைப்பருவம்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு மார்க்கங்கள் யாவை?

நமது சமூகத்தார் ஏனைய சமூகத்தாரைக் காட்டிலும் பொருளாதாரத்தில் மிக பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றார்களென்றே கூறலாம். இதற்குக்காரணம், நமது சமூகத்தாரிற் பலர், பிறந்த ஊர்தவிர பின்னேயோர் ஊர் தெரியாதவராயும், உலகத்தில் நடக்கும் வியாபாரங்கள் எவையென விசாரியாதவராயும், கொக்குக்கு ஒரேமதி என்பதுபோல, விவசாயத் தொழில் தவிர வேறுரு தொழில் பயிலாதவராயும் இருப்பதனால்தான். இந்நிலைமை இனியும் நீடித்தால் ஜைன சமூகத்தில் பலர் வறுமையாளராகி, சுயமரியாதை கெட்டுத் தம் மதக் கோட்பாடாகிய அஹிம்சா தர்மத்தினின்றும் தவறி கெட்டுப்போவாரென்பதில் யாதொரு ஐயப்பாடுமிராது ஒருவன் பசியால் மெலிகின்ற காலத்தில், அவனுக்கு, மானம் குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, தேனின் கசிவுந்த சொல்லியர் மேல் காமுறுதல் ஆகிய பத்தும் பறந்துபோம் என்பது உண்மையல்லவா? இதனை நோக்கியன்றே உலகத்திலுள்ள பத்திசாலியான சமூகங்கள் சுயமரியாதையை இழக்காமலிருக்கமக்களுக்குப் பொருளாதாரம் பெருகுவதற்கான பல மார்க்கங்களைக் காண்பித்திருக்கின்றன. உதாரணமாக ஆங்கிலேயரைக் கவனித்தால் அவர்கள் சென்னைமாகாணத்திலுள்ள ஜனத்தொகையவ்வளவே இங்கிலாந்தில் வசிக்கின்றனர். அத்தகைய சிறிய தொகையினராகிய அவர்கள் உலகத்தில் பெரும்பாகத்தைத் தம்வசப்படுத்திக் கொண்டு ஏகாதிபத்தியம் செலுத்தும்வல்லான்மையுடையவர்களாயும், உலகம்போற்றும் மரியாதையுடையவர்களாயும் இருப்பதற்குக்காரணமென்ன? அவர்கள் தங்கள் சமூகத்தை ஐக்யப்பாடு செய்துகொண்டு கூட்டுறவில் வியாபாரங்களை ஆரம்பித்தும், கூட்டுறவு பாங்கிகளை ஏற்படுத்தியும் கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்தும் தங்கள் சமூகத்தாரின் பொருளைக் கோடிக்கணக்காக உயர்த்தி சுய மரியாதையைக் காப்பாற்றியதால்தான், இந்த உன்னத நிலைமையை அடைந்தார்கள். அடுத்தபடியாக நமது நாட்டிலுள்ள நாட்டுக்கோட்டை செட்டிமக்களை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் தங்கள் சமூகத்தை ஐக்கியப்படுத்திக் கொண்டு கூட்டுறவு முறையிலும், தனித்தும் அநேக பற்றுவரவு பாங்கிகளை ஏற்படுத்தி வியாபாரஞ் செய்வதால், தமிழ் நாட்டிலும் பிற குடியேற்ற நாடுகளிலும் செல்வச் சீமான்களாக வாழ்வதுடன் மக்களுக்கு வேண்டிய பல தருமங்களை லக்ஷக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் செய்து இவர்கள்போலத் தருமவான்களுண்டாவென உலகம்போற்றும் கற்புகழையும் நல்ல மரியாதையும் பெறுகின்றனர். சமீபத்தில் சமூகசீர்திருத்தஞ் செய்ய முற்பட்ட நாடார்கள், நாடார்குலபாங்கிகளையும், ஐக்கியநாண சங்கங்களையும் ஏற்படுத்தி தங்கள் சமூகத்தினரை முன்னணிக்குக் கொண்டுவருகின்றனர் வன்னியர், செங்குந்தர், கம்மவார், ரெட்டியார், குலாலர், மருத்துவர் ஆகிராவிடர், அருந்ததியர் முதலிய சமூகத்தினரும் தங்கள் பொருளாதார நிலையை ஆராய்ந்து உயர்த்திக்கொள்ளப் பலவகையானும் முயற்சிசெய்து வருகின்றனர்.

நமது சமூகத்தினரோ, சிரேணிக மகாராஜன் பெருமையையும், மஹாபுராணத்தில் வாழும் குபேர ராஜாக்களின் சம்பத்துக்களையும் பேசுவதோடு தங்கள் சமூகப் பொருளாதாரப் புகழை முடிவு கட்டுகிறார்கள். எங்கள் அப்பா தாசிலாயிருந்தார் என்று தற்குறியான மகன் பெருமை பேசுவதுபோலல்லவா இச்செய்கையு மிருக்கிறது. இத்தகைய ஜமீல் பெருமைக்கு இனி உலகத்தில் இடமில்லையென்பதை நமது சமூகத்தினர் உணரவேண்டுவது அவசியமாகும்

இனி, சென்றகால நிகழ்ச்சியை வறட்டுத் தவளைபோல் கத்திக்கொண்டிராமல் காரியத்தில் நமது பொருளாதார நிலைமையை ஆராய்ந்து நாலாமார்க்கத்திலும் பொருளைப்பெருக்க மார்க்கந்தேடவேண்டும்.

நமது சமூகத்தில் ஒருகுடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தால அப்பிள்ளைகள் கால்வரும் நான்கு மார்க்கங்களிலும் பொருள்தேட வழி

செய்யவேண்டும். ஒருவன் சாஸ்திரீய முறையில் விவசாயம் செய்யவும், மற்றொருவன் பல சரக்கு வியாபாரஞ்செய்யவும், வேறொருவன், கைத்தொழில் செய்யவும், இன்னொருவன், உத்தியோகத்தில் அமரவுமான பல துறைகளில் அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். இம்முறையை அனுஷ்டிக்கும் சமூகம் என்றும் வறுமையிலாழ்ந்து சுயமரியாதையை இழக்காது. இத்தகைய நான்கு மார்கங்களுக்கும் சமூகத்தில் வசதியிருக்கவேண்டும். விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய காரியங்களுக்காக வேண்டிய முதலைச் சமூகத்தில்சுலபமாகப்பெற வசதிகளிருக்கவேண்டும். கூட்டுறவு முறையில் பாங்கிகளை ஏற்படுத்தி இவ்வசதிகளைச்செய்யலாம் நமது சமூகத்தில் கூட்டுறவு பாங்கிகளை ஏற்படுத்தினால் மேற்கூறிய காரியங்களைச் செய்வோர்க்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். சில சமூகத்தில் கூட்டுறவு பாங்கிகள் உத்தேசித்த பலனைக் கொடுக்காமல் பிரதிகூலமான முடிவுகளே வருவதுபோல, நமது சமூகக் கூட்டுறவு பாங்கிகள் வருவதற்கு நியாயமில்லை. நமது சமூகத்தின் தலைவராய விளங்கும் ஸ்வஸ்திஸ்ரீ மடாதிபதி சுவாமிகளுக்கு எல்லா வகையாலும் நாம் கட்டுப்பட்டிருப்பதால், அவருடைய கட்டுதிட்டங்களினாலும் மேற்பார்வையினாலும் நமது பாங்கிகள் சிறந்த வேலைகளைச் செய்துவரும். இத்தகைய பாங்கிகளுக்கு முதல் சேர்ப்பதும் பிறபாங்கிகளைப்போல அத்தனை கஷ்டமிராது. அனேக ஜைனகிராமங்களில், தரும நிதிகள் ஆயிரக்கணக்காயிருக்கின்றன. அவைகளைத் தற்பொழுது சரியானமுறையில் வைக்கப்படாததனால், சில பெரியதனக்காரர்களும் கையடி வாயடிக்காரர்களும் தாங்கள் இட்டது சட்டமாயும் போட்டதுதணக்குமாயும் இருக்கின்றன. இத்தகைய நிதிகளை, ஜைனர் கூட்டுறவு பாங்கிகளில் டிபாஸிட் செய்துவைக்கலாம். இதனால் பாங்கிக்கு முதலாவதோடு, தொழில், வியாபாரம் விவசாயம் செய்பவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுத்து. தரும பணமும் சட்டதிட்டப்படியான முறையில் ஒரு தம்படியும் விடாமல் வளர்வதற்கு ஹேதுவாகிறது. ஜைனர் பெருத்த ஒவ்வொரு கிராமத்திலும் ஜைனர் கூட்டுறவு பாங்கி (Jain Co-operative Society) களை ஏற்படுத்தி இத்தகைய தரும நிதிகளை டிபாஸிட் செய்து, கூட்டுறவின் நன்மையைப் பெருக்கலாம்.

சிலர் கூட்டுறவுபாங்கிகளைச் சர்க்காருடைய தென்றும், அப்பாங்கியில் பணம்போட்டால், பணம் போய்விடுமென்றும் அஞ்சுகின்றனர். இஃது மிக அறியாத்தன்மையேயாகும். கூட்டுறவு பாங்கிகள் ஜனங்களுடைய சொந்தப் பாங்கிகளேயாகும். அப்பாங்கிகளைப் பிறர் மோசம் செய்தனிடாம லிருப்பதற்காக ஜனங்களின் நன்மையை உத்தேசித்து அப்பாங்கிகளை அரசாங்கத்தார் மேற்பார்வைசெய்து வருகின்றார்களே தவிர வேறில்லை. அங்ஙனம் அவர்கள் மேற்பார்வை செய்வதால், பணம் டிபாஸிட் செய்பவர்களுக்கு மிகுந்த பாதுகாப்புச் செய்து கொடுப்பதற்கு ஒப்பாகிறது. இதுபோன்ற கூட்டுறவு சங்கங்களில் ஏற்படும் இலாபதொகையைக்கொண்டு கல்விபோன்ற பொதுநலக்காரியங்கள் செய்வதற்கு மிகவும் அனுகூலமாயிருக்கும்.

நமது தமிழ்நாடு முழுதும் இத்தகைய பாங்கிகளை ஏற்படுத்தினால், ஒரு கிராமத்தில் சுமார் பத்தாயிரம் ரூபாய் வீதம் 50 பெரிய கிராமங்களில் லாவாதேவிகள் நடத்தலாம் இதனால் சுமார் ஐந்து லக்ஷம் ரூபாய்வரையில் பற்று வரவுகளுக்கு இடமேற்படும். இப்பெரிய லாவாதேவியினால் வருஷம் ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபாயக்குமேல் பொதுநல நிதி கூடுதலாகும் இப் பெரு நிதி கொண்டு ஒரு உயர்தர கலாசாலையையும் நிர்வகித்து வரலாம். ஜைன சமூகம் விருத்தியடையவேண்டுமென்ற கருத்துடைய மடாதிபதி சுவாமிகளும், முன்னேற்றங்கருதும் ஜைன கனவான்களும் இதுபோன்ற கூட்டுறவு பாங்கிகளை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தி, நம்மவர்களின் வறுமைப்பிணியைத் தொலைத்து அவர்களை விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய துறைகளில் முன்னேற்றமடையச் செய்வார்களாக.

பத்திரிகாசிரியர்.

ஜைன மதத்தின் தற்கால நிலைமை.

ஆண்டுதோறும், முக்கியமான பிரதேசங்களில் மஹாநாடுகூட்டி, நமது சமூகத்தை அரித்துப் பாழாக்கும் காரணங்களையும், மதாபிவிருத்திக்கான விஷயங்களையும் ஆராய்ந்து, சமூக சீர்திருத்தத்திற்கான நன்கனைத் தேடாமலிருப்பதே நமது சமூகத்தின் முக்கியகுறையாகும். நம்மைத்தவிர இந்தியாவிலுள்ள ஏனைய மதஸ்தர்களெல்லாம் ஒழுங்கான சங்கங்களேவற்படுத்தி, அவைகளின்மூலம் பிரசாரம், நிர்மாணம் முதலிய சிறந்த காரியங்களேச்செய்து, தங்கள் பூர்வீக சிறப்பையும், கௌரவத்தையும் புனருத்தாரணஞ்செய்துகொள்ளுகின்றனர். அன்றியும் நமது நாட்டில் சமீபத்தில் தோன்றிய சில மதங்களும் தங்களுடைய கட்டுப்பாடான வேலையினால் பலரை மதமாறுதல்செய்தும், உலகம் அறியத் தங்கள் கொள்கைகளே விளம்பரப்படுத்தியும், ஆச்சரியப்படத்தக்கவாறு அபிவிருத்தியடைந்திருக்கின்றன.

இதற்கு உதாரணமாக, ஆரிய சமாஜத்தையும், பிரம சமாஜத்தையும் கூறலாம். அவைகள் தங்கள் மதக்கொள்கைகளே யாவரும் பின்பற்றும்படி காலதேசவர்த்தமானங்களுக்கேயைய அமைத்து, ஆண்டுதோறும் அபிவிருத்தி அறிக்கையை வெளியிட்டும், மஹாநாடுகள் கூட்டியும், கிளேச்சங்கங்களே ஏற்படுத்தியும், சம்பளம்பெறும் உத்தியோகஸ்தர்களாலும், கௌரவ உழைப்பாளர்களாலும் மேற்பார்வைசெய்தும், யாவரும் விரும்பிப் போற்றும் நிலைமையை அடைந்திருக்கின்றன. அன்றியும் அவைகள், அரசாங்கம் அரிய அறிமுகப்படுத்திக்கொண்டதோடு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜர்மனி, இத்தாலி, இங்கிலாந்து முதலிய தேசங்களிலும் தங்கள் மதங்களின் மேன்மையை விளம்பரப்படுத்தி, பல அறிஞர்களைத் தங்கள் மதம் தழுவும்படிசெய்தும், பலர் அவைகளுக்காகப் பெருநிதி உதவும்படிசெய்தும் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. இத்தகைய அற்புத அபிவிருத்தியானது, சமாஜத்தாரின் ஐக்கியப்பாடு என்னும் அரிய மந்திரத்தின் சக்தியேயாகும்.

ஜைனமதமானது அரிய தத்துவக்கோட்பாடுகளேயும், உலகில் யாவரும் போற்றித்தேடும் ஞானப் பொக்கிஷங்களேயும் அறுதியிட்டுக்கூறுத காலந் தொட்டுப் பெற்றுவிளங்குகின்றதென்பது எவரும் மறுக்கக்கூடாத உண்மை. அங்ஙனமிருந்தும், அது ஜைனமதத்தினரின்தொகை நாளுக்குநாள் அருகிவருவதும், அக்கொள்கையைப் பின்பற்றுவோரின் சங்கியைத் தேய்த்தவருவதும், ஜைனர்களுள்ளே அட்டூழியம் பெகிவருவதும், அஞ்ஞானவீரர்கள் அதிகரித்தோன்றுவதும், அஹிம்ஸாகொள்கை மறைந்தவருவதும் நாம் இப்பொழுது கண்கூடாகக் கண்டுவரும் காட்சியாகும். இக்கிலமை நீடித்தால் இம்மதத்திற்கு இரங்கற்பா கூறும்காலம் அதிகாலம் வேண்டியிராது.

தற்பொழுது குற்றுயிராயிருக்கும் ஜைனமதத்திலுள்ள சிறியகூட்டத்தினரிலும் நூற்றுக்கு ஒருவர் கூட அமமதக்கோட்பாடுகளே அறிந்தவரா யிரார். சிலர் சந்தியாவந்தன மந்திரங்களேயும், ஸ்தோத்திரங்களேயும் அர்த்தந்தெரியாமல் உருப்போட்டு ஒப்பிப்பதோன்றினாலேயே தாம் ஜைனர் என்றும், முத்திமார்க்கத்திற்கு அருகர் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர்போலும். இச்சின்னந்தாழ ஜைனமதத்தின் உயரிய கொள்கைகள்? இச்செய்கை கானல் நீரைக் கால்வாய் நீரெனக் கருதி கலங்கியோடும் பேதை மானினத்திற்கொப்பிடலாம்.

ஒவ்வொரு ஜைனனும் தேடவேண்டிய இரத்தினங்கள் மூன்று. அவை நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என மூன்றும். இம் மும்மணியே ஜைனமதத்தின் கிரீடத்தில் ஒளிர்வனவாகும். அவற்றில் ஒன்றேனும் பிரகாசிக்காத இதயமும் வழிதேடினுமில்லை. முடியிழந்த மன்னனேபோல் முக்காடிட்டு உலகத்தில் ஒளியில்லாத ஒரு மூலையில் ஒளிந்திருக்கின்றோம்.

சகோதரர்களே! இனியாவது மூலையில் முக்காடிட்டு உறங்குவதினின்றும் நீங்கி, முன்னணியில் வந்து மதோத்தாரணத்திற்கான காரியங்களேச்செய்வோமாக. முக்கியமான இடங்களில் சங்கங்களே ஸ்தாபித்து, சமூக முன்னேற்றத்திற்கான [illegible] களேத் தேடுவோமாக.

முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்.

திட்டமில்லாத வேலை.

நேமி எழுதுவது.

நாம் எதாவது ஒருவேலையைச் செய்யத் தொடங்குமுன், அவ்வேலையின் அளவு, அதன் செலவு, ஆரம்பம், முடிவு, காலம் முதலியவைகளை முதலில் வகுத்து ஆராய்ந்துபார்த்துத் தொடங்கவேண்டும். இவ்வனம் ஆராய்ந்து பார்த்துச்செய்யும் வேலைகள் யாவும் ஒழுங்காகவும் அழகாகவும் முடிவுபெறுமென்பது நிண்ணம். இத்தகைய நற்பழக்கம் மேற்நாட்டாரைவிட மேல்நாட்டாராகிய ஐரோப்பியரிடத்தில் மிகுதியுங் காணலாம். அவர்கள் எத்தகைய வேலைகளைத் தொடங்குனும் முதலில் சரியான ஒரு திட்டம் வகுக்காமல் அவ்வேலைகளைத் தொடங்க மாட்டார்கள். ஒரு சிறியவீடு கட்டுவதாயிருந்தாலும், வீடுகட்டுவதற்கான திட்டம் வகுக்கும் நிபுணர்களைக்கொண்டு தாங்கள் செலவுசெய்ய உத்தேசித்திருக்கும் தொகைக்கேற்பத் திட்டத்தைத் தயாரித்துக்கொண்டு பின்பு வீடுகட்டத் தொடங்குவார்கள். இதனால் அவர்கள் குறித்தகாலத்தில், தங்கள் கருத்துப்படிக்கான வீட்டை உத்தேசித்த செலவில் கட்டிமுடித்து இன்புறுகின்றார்கள். நம்மவர்களோ திட்டம் ஒன்றுமில்லாமல் மனம்போனபடி வேலையைத் தொடங்கிப் பின்பு ஆரம்பித்த வேலைக்குப் பொருன்போதாமல் அவ்வேலையை இடையில் விட்டுவிடுவதும், சில சமயம் கடன் உடன்பட்டு அவ்வேலையைப் பூர்த்திசெய்தாலும் அவ்வேலை மனதுக்குத் திருப்தியளிக்காததும் உபயோகமில்லாததும் உத்தேசித்த காரியத்துக்கு லாயக்கில்லாததுமாகவும் முடிகிறது. இதற்குத் திருஷ்டாந்தம் தமிழ்நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் உண்டு. சில கிராமங்களில் நூறு இருநூறுரூபாய் வசூலித்துக் கோயில் கட்ட அடிப்படைபோடுவார்கள். அதற்குமேல் பொருளின்றி அதை அப்படியே விட்டுவிடுவார்கள். ஒருசமயம் முயற்சித்து நாற்பக்கம் சுவர் எழுப்பினாலும், மேற்கூரைக்குப் பொருன் இல்லாமல் இடையிலே நிறுத்திவிடுவார்கள். மேற்கூரைக்குப் பொருன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக் கூரைபோட்டாலும் அதைப் பூசுவேலைசெய்யாமல் அங்ஙனமே விட்டுவிடுவதும் உண்டு. ஒருக்கால் மேற்கூறிய வேலையெல்லாம் முட்டின்றிமுடிந்தாலும் கோயிலின் நிர்வாகத்தை நடத்தப் பொருளின்றி விழிப்பதும் உண்டு. இவையெல்லாம் பூர்த்தியானாலும் கட்டப்பட்ட கோயிலானது சுகாதாரவசதியின்றி இருளடைந்து வெளவால்கள், தெரிஞ்சல்கள் முதலியவைகள் வாழ இடமாகித் துர்நாற்றம்வீசும் நிலைமைக்குவந்துசேரும். கோயிலிலிருப்பிவருபவர் அல்லே றிதுகோமாவது தங்குவதற்கு மனமின்றி வந்த வழியேபார்த்துச்செல்வார்கள். நாம் எதை உத்தேசித்துச்செய்தோமோ அந்த உத்தேசம் நிறைவேறுமற்போகிறதல்லவா? இதற்காகத்தான் நாம் எக்காரியத்தையும் ஒரு திட்டம்வகுத்தும் உத்தேசித்த பலனையளிக்கக்கூடியதாவென்றும் யோசித்தும் செய்யவேண்டுமென்பது.

சமவசரணப் பதிகத்தில் ஒரு பாட்டு.

அறிவனீ அறியாப்பொரு ளின்மையால்
முறையுரீயிலே முற்ற வுணர்ச்சியால்
கறவுரீயிலைக் காய்வதொன் றின்மையால்
இறைவனீயுலகி யாவு மிறைஞ்சலால்.

எட்டுப்பிரதியில் கண்டது.

அரைக்காசு செலவில் தேடிய அரிய பொக்கிஷம்.

நினைந்தோறும் வம்புக்கும் தும்புக்கும் விசேஷமாகச் செலவழிப்பதைக் காட்டிலும் இரண்டுகாலுக்கு ஒருதம்படி வீதம் செலவழித்து விவேகசக்தியைப் பெற்றால், விவேகத்துக்குவேண்டிய ஞானப்பொக்கிஷத்தைப் பெறலாம். விவேகியென மதிக்கப்பெறலாம். அன்பர்களே! இவ்வழியில் அரைக்காசும் செலவழிக்க மனமில்லையோ?

திருமேற்றிசையந்தாதி.

முகவுரை.

அந்தாதியென்பது, முன்செய்யுளின் ஈற்றி லுள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தொடர்ந்து, வரும்செய்யு ளின் முதற்கண் வருவதாம். அந்தாதி நூற்க ளில் பல, முன்செய்யுளினிறுதியும், வருஞ் செய்யுளின் முதலும் ஒன்றுப் வருவதோடு, நூலின் முதற்செய்யுளின் முதலும், இறுதிச் செய்யுளின் ஈறும் ஒன்றுகியும்வரும். இத் திருமேற்றிசையந்தாதி நூறுசெய்யுளும், அந் தாதியாகத் தொடர்ந்துவந்தமையேயன்றி, நூலின்கடைசி செய்யுளின் ஈறும், முதற செய்யுளின் முதலும் முறையே 'பூவும்புனலும் பொழிந்துகின்றே பூவும்புனலும் பொழிந்து' என ஒத்துவந்தமை காண்க.

திருமேற்றிசையந்தாதி யென்னும் இவ் வரிய நூலை இயற்றியருளிய பெரியார் யாரென அறியக்கூடவில்லை. இந்நூலின் முதற் செய்யு ளின் இரண்டாமடியிலே, 'திருத்தீபையிற் செய்தவத்தோர்மேவுந் திருப்பாழியிற் றிருமேற் றிசை ஈசனே' என்னும் வாக்கியத் தொடர்பு வருதலைக்கொண்டு, பண்டைக்காலத்தில் தென் னாட்டிலே, அருந்தவமுனி சிரேஷ்டர்கள் பலர் பாழிகொண்ட 'தீபங்குடி' என்னும் இவ்விய கேஷத்திரத்தைச் சேர்ந்தவராயிருக்கலாமென ஊகிக்கலாம். பாழி என்பது முனிவாசத்தைக் குறிக்கும் குகை, அல்லது மடத்தைக் குறிப்ப தாகும். அப்பாழிக்கு மேற்றிசையில் கோயில் கொண்ட ஸ்ரீ பார்ஸ்வநாத தீர்த்தங்கர பரமேஷ் டியை இந்நூலாசிரியர் திக்குநோக்கித் துதித் திருக்கின்றார். பல செய்யுட்களிலே புயல் வண்ணனென்றும், பணப்பத்தருடையோய் என் றும் பணப்பத்தர் நீழல் நின்றான் என்றும் கூறுமுகத்தான் ஸ்ரீ பார்ஸ்வநாத தீர்த்தங்கர ரையே இவ்வாசிரியர் துதிபாடுகின்றாரென்பது போதரும்.

எனக்குக்கிடைத்த ஏடு மிகப்பழமையாயும் மூன்கள் ஓடிந்தும், இடைஇடையே பாணப் பூச்சிகளால் துளைக்கப்பட்டும் சிதழிந்த நிலைமையில் கிடைத்தது. அதை நான் பத்து வருடங்களுக்கு முன்னே செப்பஞ்செய்து காகிதப் பிரதியாக்கினதை இப்பொழுது நமது, "விவேகசக்தி" யின் வாசகர்களின் உபயோ கத்துக்காகப் பகுதி பகுதியாக வெளியிடுவதற்கு முன்வந்தேன். இதுபோன்ற பிரதி எவரிட மேனும் இருப்பின், அதை விவேக சக்தி ஆபீஸுக்கு அனுப்பினால், இச் சந்தேகங்களை யும், பிழைகளையும் பார்த்து ஒப்புநோக்கி, இந்நூலைச் செப்பஞ்செய்யப் பேருதவியாயிருக் கும்.

திருநூற்றந்தாதிபோல, இத்திருமேற்றி சையந்தாதியும், சொல்லாலும் பொருளாலும் சுவை பெரிது பயந்து, ஸ்ரீ பார்ஸ்வநாத தீர்த் தங்கர பரமேஷ்டியைப் பராவி வருதலின், நை னர் யாவராலும்போற்றி வாசித்தற்குரியதொரு சிறந்த பிரபந்தமாகும்.

இவ்வரிய நூலை, நால்வகைத்தானத்து ளொன்றுகிய சாஸ்திரதானங்கருதி வெளியிட ஆர்வமுடைய கனவான்கள், எமக்கு நூறு ரூபாய் அனுப்பினால், தனிநூலாகப் பொருள் கொடுத்ததனிய கனவான்பேரால் வெளி யிட்டு யாவர்க்கும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்வேன். இதுபோன்ற தானமே எல்லா வகைத் தானத்திலும் தலைசிறந்ததாகும்.

பத்து வருடங்களுக்குமுன்னே இது போன்ற வேண்டுகோளைத் 'திருப்பாமாலை" என்னும் நூல் வெளியிடுவதற்காகத் தருமசீல னில் வெளியிட்டேன். அப்பொழுது, தமிழ்ப் பேரறிஞரும், சிறந்த ஜைனகனவானுமாகிய வேதாரண்யம் ஸ்ரீமான் அய்யன் முதலியார் அவர்கள் மேற்கண்ட திருப்பாமாலை நூலுக்கா கும் முழுச்செலவையும் ஏற்று மறையும் நிலை யிலிருந்த "திருப்பாமாலை" யை வெளி யிட்டுத் தமிழ்நாட்டுக்குப் பேருபகாரஞ்செய் தார். அத்தகைய கனவான்போல இந்நூலுக் கும் யாராவது முன்வருவார்களா?

திருமேற்றிசையந்தாதி.

காப்பு.

கட்டளைக் கலித்துறை.

திருமா மகளுறை கின்றசெந் தாமரை யொன்றதன்மேல்
வருமா மலர்க ளிரண்டுடையான் மதிபோல் நிழற்றுங்
குருமா மணிக்குடை மூன்றுடையான் குணநான் கமைத்த
பெருமா னறுங்கொண்டை யென்னவல்லார்க் கில்லைப் பேரிடரே.

நூல்.

கலித்துறை.

1. பூவும் புனலும் பொழிக்தொரு மூன்று புவனத்தெல்லாந்
தேவும் புகழ்ந்தமை யாத்திருத் தீபையிற் செய்தவத்தோர்
மேவுந் திருப்பாழியிற் றிருமேற்றிசை வீரனே யென்
னுவும் பாவமென்றுல் என்சொலாரிக்க நாட்டவரே.

2. காடே னினதற மல்லது நாற்கதி நாடகம்புக்
காடே னவரிவர் தெய்வமென் றையமுற் றங்கு நிங்கு
மோடே னினிவந் தனையடைந் தேனெரு கால்நினைக்க
வீடே தருந்திருத் தீபையின் மேற்றிசை வின்னவனே.

3. விண்ணிற் புகுந்தும் நிரயத் தழுந்தியு மீளவந்து
மண்ணிற் பிறந்து பிறந்துஞ் செல்லார் வடபாழிவந்தென்
கண்ணிற் புகுந்தென் கனியிற் றுவக்குண்டென் காதல்கெஞ்சத்
தண்ணிற்கு மெந்தை சரணே சரணென் றுணர்ந்தவரே.

4. உணர்வது கண்டமுங் கேவலப் பாவையை யுள்ளத்துள்ளே
புணர்வது மாற்றுவ தைம்பொறி வாயிற் பொறிப்பணத்தாற்
றுணர்வரி வன்றலைப் பாம்பாசன் செய்த தொப்பிறிப்ப
இணர்வரி வண்டரற்றும் பிண்டி நீழ லிருந்தவனே.

5. இருந்துங் கிடந்துநின் றுஞ்சென்று நாடொறு மிவ்வுடம்பு
வருந்துந் தொழிலன்றி யொன்றறியாது மனமுமின்னங்
கிருந்துங் குறியில் வருகின்ற தில்லைக் திருவடிக்கீழ்ப்
பொருந்துந் திறமுண்டே வடபாழிப் புயல் வண்ணனே.

6. வண்ணங் கரிய தருணீ ரதுமறு வொன்றுமில்லா
தெண்ணுந் திருமறு வாயிரத் தெட்டின தெண்குணத்த
தண்ணின் றெழுமொரு பேரின்ப வெள்ளத் தும்பரெல்லாம்
நண்ணுங் குடதிசைக்கே யடியேன் பெற்ற நன்மணியே.

7. மணியாலணிந்தசெம் பொன்னெயில் போலவிம் மண்ணில் விண்ணி
லணியா விளங்குதங் கோயில்பல கோடிக ளாயினுமென்
பிணியாம் பிறவிக்கு ணன்மருந்தாம் பெருமா னடிகள்
பணியா லயத்தன்றி யானறியே னுண்ணப் பாலிப்பதே.

8. பாலிப்பது நின் பணவரங் கம்பணிந் தேத்துவதுன்
வாலிப்பதுநின் மதுமலர்ச் சேவடியே வாய்ந் தடியேன்
சேலிப் பதுநின் றிருத்தொண்டரைத் திருமேற் றிசையாய்
வீலிப்பது பண்டு செய்துசெய் தீட்டிய வெவ்வினையே.

9. வினைதருந் துன்பப் பகைப்பெரும் போர்வென்று வீற்றிருப்ப
நினைதருந் தொண்டர் நினையுந் திருநக ரந்தலத்தின்
வனைதரு மூக்குடைத் திக்குடை யாடை மணியுரகப்
புனைதரு பந்தற் பணமுடையார் மன்னும் பொன்னகரே.

10. பொன்னுந் துகிரும் புனைகுடை மூன்றுடன் பூசல்வண்டு
தன்னுந் துணர்ப்பிண்டி தண்ணிழற் செய்யவுஞ் சூளிகைமேன்
மின்னும் பருமணி வான்வெயில் வீசவிடமு காப்பாம்
பின்னுங் குடதிசையாய்க் கென்கொல் நீழலிடு கின்றதே.

11. இடுசுடர்போல் நின்றெரியும் பணி மணி யெப்பொழுதும்
விடுசுடர் பல்பகலாய் வெயில்வீசும் வெவ்வினைவே
ரடுசுடர் ஞானத்தவஞ் செய்தின்றுய்க் கெழுந்த கதிப்படப்
படுசுடர் வாள்வெயிலும் படவேண்டுங் கோலப் புண்ணவனே.

12. பண்ணறிந்தோ மல்லப் பாட்டறிந்தோ மல்ல வெட்டெழுத்தோ
டெண்ணறிந்தோ மல்ல வின்றறிந்தோ முற்று மெவ்வுயிர்க்கும்
கண்ணறிந்தோ மென்றறிந்தோர் தொழும் பணக் காவணத்தார்
தண்ணறுந் தோடவிழ் தாமரைத்தாள் நிழல்சார் வுற்றதே.

13. சாருங் கதிகண மதேமுடிவிற் றகாத மவரைக்
காரும் மணியு மணியரென்றேத்தி யெக்காடுங் கண்ட
வூரு மிரைகளைப் புள்ளொத்து நாமுழந் தோடிவந்து
சேரு மிடமெம் பிரானீன்ற மேலைத் திசாமுகமே.

14. முகமதி யோதி முதில்விழிநீல மொழி யமிழ்தென்
றகமதி வாடினு மின்னெடு நாளினி யண்டர்முன்னே
தொகுமதி முக்குடைக் கீழே விரிபணச் சுற்றரக்காட்
புகுமதியே மதியல்லா னினைமதி புன் மதியே.

15. மதியுடையோம் பெருவாழ்வுடையோ மெண்ணில் மண்ணில் வைத்த
நிதியுடையோ மென்றிருப்பா ரிருக்க நிலவு முத்திப்
பதியுடையோ மைம்பத முடையோம் பணக்கா வணத்தார்
துதியுடையோ மினி யென்னுடையோ மென்று சொல்லுவதே.

16. சொல்லார் திருவறஞ் சூடார் திருமணற் றொண்டருடன்
செல்லா ரிறைவன் றிருநகர்ச் சூழத் திகழ்ந்திலங்கும்
கல்லார் பணப்பெருங் காவணங் கண்டுகண் ணீர்த்தும்ப
ரில்லார் பிறவிப்பிணிக் கென்செய் வார்சிலர் நீசர்களே.

17. நீசக்கமட னெறிந்தகற் குன்றினு நீ நடக்க
வாசக் கமல மலரினுக் தொண்டர் வலியினைப்
பாசத்தி னீங்கித் தருங்கமழ் போதினும் பன்மணிவான்
மீசப் பணப்பந்தர் நின்றுய்க் கென்தொல் மெல்லியதே.

18. மெல்லியன் மங்கையர் கொங்கைத் தோணிவிட்டு விட்டுலகஞ்
செல்லியல் சிந்திப்பவர் நினையார் திருத்தீயையி லென்
சொல்லியன் மாலை புனைபணக் காவணஞ் சூழ்ந்தெரிக்குங்
கல்லியல் வெஞ்சுட ராயிரமே வழிகாட்டு மன்றே.

19. என்றுங் கடிகமழ் தாமரைப்போது மெப்போதும் வண்டு
தன்றும் நறுமலர்த் தொங்கலம் பிண்டியுந் தொண்டருடன்
சென்றும்ப ரேத்துந் திருமேற் றிசையுஞ் செழுங்கனிகை
யொன்று மிரண்டு முடைத்தெம்மை யாளு மொருவடிவே.

20. வடியும் பிணையு மனையகண் ணுர்வணங்கும் மருங்கிற்
றுடியும் முலையும் நினைந்துழல் வீர்தொழு வீர்துறந்தார்
மூடியுங் கடகமு முத்தணி யாரமும் மூரிப்பைம்பொற
கொடியுங் குடையும் மிடைதிரு மேற்றிசைக் கொண்டலையே.

21. கொண்டலை யண்டர் தொழுதெழுங் கோனெங் கொற்றவனை
வண்டலர் தாமரைப் பொற்றேர் வல்லினை மஞ்சுறங்குந்
தண்டலை மாடுயர் நீயையுட் பச்சைத் தவக்கொழுங்கைக்
கண்டலை யாழி நிகராம் பிறவிக் கழிந்தனமே.

22. கழியுங் தெரிவையர் பற்றென்று பொற்பணைக் காவணத்தாய்
மொழியுந் திருமொழி யார்தெளிவா ரொருமூர்த்தமும் நீ
யொழியும் பொழுதில்லை கேவலப் பாவையை யுள்ளத்துள்ளே
பொழியுங் களிகொண் டகலாள் கமலப் பொலங்குழையே.

23. பொலங்குழை மாதர் நடஞ்செய் பொற்றேருடன்னை புண்டரிக
நலங்கிளர் போதிரண் டாயிரம் சேவிப்ப நாற்றிசையு
மிலங்கித ழாயிரத் தெட்டுட னீரிருகாத வெல்லை
மலர்ந்தது மேற்றிசை யானடி யேத்து மணமலரே.

24. மணப்பந்தரி லும்மை வாழ்த்திய மாதரும் மைந்தருமின்
பிணப்பந்தரிற் கண்டழுதரற்று முன்னம் பேதுறுக் நீக்
குணப்பந்த வல்வினைப் பற்றற்ற மேற்றிசைக் கோளரனின்
பணப்பந்தர் நீழல்நின்றுன் றிருத்தாள் சென்று பாடுமினே.

25. பாடியு மெந்தை பணப்பந்தர் வாழ்த்தியும் பண்ணவன்றுள்
சூடியும் கன்னெறி சென்றுதுன்னுர் தவராடையின் மெய்ம்
மூடியும் வீழ்சடைக் கட்டியு முக்கோல் பிடித்துமுன்னீ
ராடியும் மூடர்படுவ ரக்தோ வின்றலைக் தலையே.

26. தலைப்படுமின் குடதிக்கு நின்ரூறற் காழ் குழலார்
வலைப்படு தெய்வம் வழிபட லோம்புமின் வல்வினைப்பே
ரலைப்படு தன்பப் பிறவிக் கடல்பின்னை யாழுமின்றி
நிலைப்படு மக்கடல் பொய்த்தரையாந் தம்மை நேர்படவே.

27. படவர வின்குளிர்ப் பந்தரின்கீழ்ப் பச்சைமேக னின்ற
வடவரைபோல் வடபாழித் திருமணல் வாரிக்கொண்டு
தடவரை வேபிணி போந்தவ் வேந்தரைச் சேர்ந்தொழுக
வடவருஞ் சீற்றவெங் கூற்றமும்போம் நம்மை யாசையற்றே.

28. அற்றே மிருவினை யஞ்சோம் கெடுந்துயரார் வஞ்செற்றஞ்
சுற்றே நினதற மேதெளிந் தோர்திரு மேறறிசைக்கே
உற்றே மினியைய மொன்று முரேமுனையே துதிக்கப்
பெற்றே முகில்வண்ண மற்றடியோ மென்பிற கின்றதே

29. நின்று மிருந்தும் பணப்பந்தர் வேந்தை நினைந்துணைந்
தொன்று முனிவ ருளாவுந் திருமுன்றி லுள்ளத்துள்ளே
நன்றும் பெருகும் நசைக்கடலீன்ற நவைக் கடலைப்
பொன்றும் படிநின் றிறைக்கவல்லார்க் கிடம் பொற்றிலையே.

(தொடரும்.)

இந்தியாவிலுள்ள ஜனத்தொகை.

இவ்வருடம் எடுக்கப்பட்ட ஜனகணிதப்படி இந்தியாவின் மொத்த ஜனத்தொகை:—

35, 29, 86, 876—இத்தொகையில்
18, 19, 21, 914—ஆண்கள்
17, 10, 64, 962—பெண்கள்

சென்ற ஜனகணிதத்தைவிட இவ்வருட ஜனகணிதத்தில் ஜனத்தொகை நூற்றுக்குப் பத்துக்கு மேல் உயர்ந்திருக்கிறது.

இந்த ஜனகணிதப்படி பிரிட்டிஷ் இந்தியாவில், மாகாணவாரியாக ஜனங்களின் ஜனத்தொகை கீழ்க்கண்டவாறு இருக்கிறது. ஆனல் சென்னை மாகாணவிவரத்தில், ஜனங்களின் சங்கியை குறிப்பிடப்படவில்லை. வெல்ஸ் ரிபோர்ட் முழுதும் வெளிவந்தபின்னர் இதை ஆராய்ந்து வெளியிடப்படும்.

1.	ஆஜ்மீர் மீர்வார்	19,497
2.	அஸ்ஸாம்	2636
3.	பம்பாய்	19,99 979
4.	பர்மா	77,895
5.	டில்லி	5345
6.	பஞ்சாப்	85,284
7.	ஐக்கியமாகாணம்	67,594
		22,08,590

இந்தியாவிலுள்ள முக்கியமான மதங்களின் ஜனத்தொகை பின்வருமாறு:—

1.	ஹிந்துக்கள்	23 3/4 கோடிக்குச் சற்று அதிகம்
2.	மகமதியர்	7 3/4 கோடிக்குச் சற்று அதிகம்
3.	சீக்கியர்	1/2 கோடிக்குக் குறைவு.
4	கிரிஸ்தவர்	1/2 கோடிக்குச் சற்று அதிகம்
5.	ஜைனர்	1/4 கோடிக்குக் குறைவு

நமது அனுதாபம்.

அகில இந்திய ஜைன சங்கத்தினின்றும் வெளியாகும் ஜைனகஜட் பத்திராதிபர் ஸ்ரீமான் C. S. மல்லிநாத் ஜெயின் அவர்களுடைய சகோதரரும், காஞ்சிபுரம் முனிசிபல் வரி சுபரிண்டெண்டுமான C.S. மேகநாதர் ஜெயின் B A. என்னும் கனவான் 14-10-31 சுகதி பிராப்தியடைந்தார். இவருக்கு இப்பொழுது வயது முப்பதானிருக்கும். இவர் வித்தையிலும் புத்தியிலுஞ் சிறந்தவர். சிலகாலம் ஹைஸ்கூல்களில் ஆசிரியராகவும், பின்னர் பி எல். பட்டத்திற்கு வாசிக்கும் மாணவராகவும், அது முடிந்தபின்னர் காஞ்சிபுர முனிசிபாலிடியில் உத்தியோகத்தராயும் தம் வாழ்க்கையை கடத்தியிருக்கிறார். ஜைனசமயத்திற்கான பல வியாசங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியிருக்கின்றார். பல பிரசங்கமேடைகளில் ஜைனசமயத்தைக்குறித்து உபந்நியசித்திருக்கின்றார். ஜைன சமயத்திற்கு அவர் செய்த தொண்டு பலவாகும். இத்தகைய அரியகனவானை நமது சமூகம் இழந்தது ஈடுசெய்யக் கூடாத நஷ்டமாகும். இவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பத்திரிகாசிரியர்.

மதிப்புரை.

குலாலமித்திரன்.

பழனியில், குலால மக்களின் முன்னேற்றங்கருதி தென்னிந்திய குலாலர் சங்கத்தினின்றும் பிரசுரிக்கும் குலாலமித்திரன் என்னும் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் கிடைக்கப்பெற்றோம். இவ்விதழ்களில் குலாலர் முன்னேற்றத்துக்குரிய வியாசங்களும், கைத்தொழில், உலக விஷயம் முதலியவைகளைக்குறித்துப் பல விஷயங்களும் காணப்படுகின்றன. சிறப்பாக எல்லாக் குலாலரும் பொதுவாக எல்லாத் தமிழ்மக்களும் விரும்பி வாசிக்கத்தக்கது. இதன் வருடச் சந்தா ரூ. 1—4—0 வேண்டுவோர் குலாலமித்திரன் காரியாலயம், பழனி. என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

சரஸ்வதி.

சென்னை ஜார்ஜ்டவுன் பிடாரியார் கோவில் வீதியில் அமைத்திருக்கும் சரஸ்வதி சங்கத்தினின்றும் "சரஸ்வதி" என்னும் மாதப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் கிடைக்கப்பெற்றோம். இவைகளில் ஆத்மார்த்தத்துக்குரிய பல வியாசங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சுதேசியத்தைக்குறித்த செய்திகளும் காணப்படுகின்றன. சரஸ்வதிசங்கம், பலரிடமன்கொடை சந்தாபெற்று, பாலிகாபாடசாலைகள், இலவச வைத்தியசாலைகள், இலவச இந்திய வைத்தியபாடசாலை, அனுதை சிறுவர்களுக்குத் தினசரிமம், அச்சுயந்திர சாலை, கைத்தொழிற் சாலை, முதலிய பல பொதுநன்மையான காரியங்களைச் செய்துவருகின்றன. இத்தனைக் காரியங்களும் பொதுஜனங்களின் நன்கொடை சந்தா முதலியவைகளால்தான் நடைபெறுகின்றன. மேற்கூறிய நற் காரியங்களுக்குச் சந்தாகொடுக்கும் அன்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பிவருகிறது. விவரம் அறியவிரும்புவோர், 'சரஸ்வதி சங்கம்' 26, பிடாரியார் கோயில்வீதி, ஜார்ஜ்டவுன், சென்னை. என்ற விலாசத்துக்கு எழுதவும்.

புதுவை முரசு.

இப் பெயரிய வாரப்பத்திரிகையின் இதழ்கள் புதுவையினின்றும் வரப்பெற்றோம். இவற்றில் சுயமரியாதைகொள்கையைத் தழுவி எழுதப்பட்ட பல வியாசங்கள் காணப்படுகின்றன. தமிழ்மக்களிடையே நெடுங்காலமாகப்படிந்துள்ள மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்துச் சீர்திருத்தத்துக்கான மார்க்கத்தைத் தெரிவிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இதன் வருடச்சந்தா ரூபா 3-0-0 வேண்டுவோர், புதுவை முரசு, புதுச்சேரி என்னும் விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

செங்குந்தமித்திரன்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினின்றும் வெளியாகும் செங்குந்தமித்திரன் என்னும் மாதப் பத்திரிகையின் இதழ்கள் வரப்பெற்றோம். இவைகளில், செங்குந்தர் சமூகத்துக்கான பல அரிய வியாசங்களும். கைத்தொழில், வியாபாரம், கல்வி, அரசியல் முதலியவைகளைக்குறித்த பல உயர்ந்த வியாசங்களும் காணப்படுகின்றன. இப்பத்திரிகையைச் சிறப்பாகச்செங்குந்தரும், பொதுவாக எல்லாத் தமிழ் மக்களும் விரும்பி வாசிக்கத்தகுந்தது. இதன் வருடச்சந்தா ரூ. 1—8—0 வேண்டுவோர் சென்னை செங்குந்தமித்திரன் ஆபீஸுக்கு எழுதிப்பெறலாம்.

84 அடி உயரமுள்ள ஸ்ரீ ஆதிநாதர் சிலாபிம்பம்.

பத்வானி சமஸ்தானத்தைச்சேர்ந்த சௌலகிரி யென்னும் கிராமத்தில் மிகப் புராதனமும் அழகும் வாய்ந்த ஸ்ரீ ஆதிநாதருடைய பிம்பம், ஒரு குன்றின் மேல் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை உயரமும் சிறப்பும்வாய்ந்த வேறு பிம்பம் இந்தியாவெங்கணும் கிடையாது. இது பலகால மாக ஏற்பட்ட சீதோஷ்ணமாறுதலினால், பிம்பத்தில் சிலபாகங்களில் பின்னங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை இன்னும் ஏற்படாமல் பிம்பம் நன்னிலையில் இருப்பதற்காக இப்பொழுது ஒரு குடையைப் போன்ற கூரை பிம்பத்தின் உச்சியில் சுமார் 23,000 ரூபா செலவில் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் பிம்பத்தைப் பழுதுபார்க்கும் கைங்கரியத்தை, சௌலகிரி, ஸ்ரீ திகம்பர ஜைனக்ஷேத்திர சபா மேற்கொண்டு நடத்திவருகிறது.

ஜைன மத நூல்கள்.

புதிய மதங்களின் தோற்றம்.

ஓர் சரித்திர ஆராய்ச்சி.

[ஓர் ஆராய்ச்சிக்காரர் தமிழ்நாட்டில் எழுதியது.]

மிகப் பழையகாலந்தொட்டு, அறிவும் சிந்தனா சக்தியும் மிகுந்த மக்களில் பலர், நிர்மேற்குமிழி போன்ற நிலையற்றதான இம்மானிட வாழ்க்கையில் ஆரோக்யம், செல்வம், சௌந்தர்யம், சுகம் முதலியன யாவும் மக்களிடையே ஒரே நீதியாக—சற்றேறக்குறைய ஒரேதன்மையினதாய் அமைந்திராமல், உலக வாழ்க்கையில் சந்தர்ப்பத்தினால் எய்தக் கூடாமலிருப்பதையும் தமது கண்களுக்கெதிரே நிகழ்ந்துவரும் பிறவித் துன்பங்களையும் நிமித்தங்களையும், வேதனையும் கண்டு அகங்கரைந்து மனங்கசிந்து உருகி வந்திருக்கின்றனர். வேத காலத்தில் ஆரிய மக்கள் உண்டு, களித்து, வீணாதானமும், சாமகானமும் செய்து சோமயஜ்ஞங்களையும் பல்வேறு வைதிக வேள்விகளையும் இயற்றித் தமது வாழ்நாட்களைத் திருப்தியுடன் கழித்துக் களிப்படைந்திருந்தனராயினும், நாட்கள் ஆக ஆக, அவர்கள் தமது இனத்தார்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் கண்டு பொறாதும் வருத்தப்படலைப் பட்டனர். ஆதலின் இவ்வுலக வாழ்க்கையே நிலையற்ற தென்றும் பயனற்றதென்றும், இப்பிறவிப் பந்தத்தினின்றும் நீங்குவதற்கேற்ற உபாயங்கள்—மார்க்கங்கள்—யாவை என்பதைக் குறித்து அவர்கள் இடைவிடாது தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்கலாயினர்.

அவ்வரிய முயற்சியில் ஈடுபட்ட ஒரு சிலர்—தனிவும் ஆற்றலும் வாய்ந்த ஒருசாரியார் உலக வாழ்வினின்றும் ஒதுங்கி, காடுகளிலும், மலையுச்சிகளிலும், வதிந்து கடுந்தவமியற்றத் தொடங்கினர்கள். துறவறமே, மற்றனவைகளினும் சிறந்தது என்றும், அதன் மூலமாகவே பிறவித்துன்பங்களை ஒருவாறு காப்பதற்கு இயலும் என்ற எண்ணம் ஜனங்களிடையே மிகவும் விரைவாகப் பரவலாயிற்று. துறவறம்பூண்ட ஒருவன் மக்கள் சமூகத்தில் மிகுதியும் கௌரவிக்கப்பட்டான்.

துறவொழுக்கத்தை மேற்கொள்ளாத எவரும் மோக்ஷசாம்ராஜ்யத்தையடைவது எளிதன்று என்னும் கொள்கையையுடைய ஆரியர்கள் அத்தகைய துறவுநிலை தங்களுக்கே—சிறப்பாகப் பிராமணர்களுக்கே உரியதென்று ஏகதேசமாக உரிமைபாராட்டி வந்தமையாலும், எனைய வகுப்பினருக்கு அத்தகைய துறவறம் ஏற்றதல்லவென்றும், அது விரும்பத்தக்கதல்லவென்றும் கூறி வந்தமையாலும், அக்காலத்தில் வழங்கிவந்த கொள்கைகளுக்கும், சம்பிரதாயங்களுக்கு மிணங்க மற்ற வகுப்பினர் சன்னியாச ஆச்ரமத்தைப் பேணுவது சாத்யமாக இருக்கவில்லை யாகையாலும், இம்முறை காளடைவில் பெரிதும் ஆக்ஷேபிக்கப்படுவதாயிற்று. சமூகத்தில் மக்களிடையில் அதிருப்திதோன்றி உள்ளுக்குள்ளாகவே புகைந்துகொண்டிருந்தது.

புதிய மதங்களின் தோற்றம்.

பிராம்மணீயத்திற்கு எதிர்ப்பு.

மானிட வர்க்கத்தின் முன்னேற்றத்தை நாடிய சிலர், பற்பல நிர்ப்பந்தங்களுக்குட்பட்ட வாழ்க்கை நிலைமைகளுக்குட்படாது மேனிலையையெய்தி, மக்களது துன்பங்களைக் களைவதற்கான ஆரிய உண்மை மார்க்கங்களை தேடக்கருதி அதன் பொருட்டு இடைவிடாது முயற்சிசெய்து வந்தது ஓர்புறமிருக்க, ஆரிய மதத்தில் புரோகிதவகுப்பினர் வைதிகச்சடங்குகளை நடத்திவைப்பது மாத்திரமேயன்றி, உலக இன்பங்களைத் துறந்த கானகத்திலும் கடுமையான துறவு நிலைமையும்கூட தங்களுக்கே சிறப்பாக உரியதென்று கருதிவந்ததால் அத்தகைய புனிதவாழ்க்கை நிலை ஆச்சமபந்தங்களினின்றும் விடுதலைபெறுவதற்குப் பெரிதும் அத்தியாவசியமானதென்று அனைவருமே அக்காலத்தில் உறுதியாக நம்புவதற்குத் தலைப்பட்டனர். ஆதலின்

ஆரியவகுப்பிலே புரோஹித வர்க்கத்தைத் தவிர மற்றவர்களுக்கு நெடுங்காலமாக இவ்விஷயமாக அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டன. அதன் பயனாக வைதிகமதத்தில் அவர்கள் பற்றுதலேசிறிதுசிறிதாக இழந்துகொண்டே வந்தனர்.

மக்களிடையே இவ்விதமான உணர்ச்சி மேலிடவும், அதன் எதிர்தாக்குதலின் பயனாக நாட்டிலே பலவிதமான இயக்கங்களும், சமயங்களும் புதிது புதிதாகத் தோன்றலாயின. மக்களது அபிப்பிராயங்களும் வேறுபாடுகளும் நூதனமான மதங்களாக உருப்பெற்றன. இவ்வாறுகப் பிராம்மண மதத்திற்குப் போட்டியாகத்தோன்றிய மதங்களிலே, மிகுந்த செல்வாக்கும், சரித்திரத்தில் நிலையானதோர் அங்கம் பெறத்தக்கதாகவுமிருந்தவை இரண்டு மதங்களே யாகும்.

சமண, பௌத்த மதங்கள்.

அவ்விரு மதங்களும் சமண, பௌத்த மதங்களே. பௌத்தமதத்தை ஸ்தாபித்த கௌதமரும், ஜைன மதத்தைத் தோற்றுவித்த மஹாவீரரும் க்ஷத்திரியர்களே. துறவிகளாகி வீடுபெறுதல் அஸாத்யமான தன்று என்ற கம்பகத்தை ஜனங்களிடையே உறுதிப்படுத்தி அதற்காகச் சிலமார்க்கங்களைக் கற்பித்து வந்தனர் என்றும், அதற்குப்பின் மற்ற வருணத்தினரும் இம்முறைகளைத் தழுவி துறவறம் பூண்டனர் என்பதும் சரித்திரத்தின் வாயிலாக அறியக்கிடக்கிறது. புதிதாகத்தோன்றிய இம்மதங்கள் இந்துமதத்திற்கு மூற்றிலும் நூதனமானவைகளல்லவென்றும், ஆரிய மதத்திலிருந்தே பிரிந்து அதனுடைய முக்கியமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை யென்பது மறக்கமுடியாத உண்மையாகும். எனினில் ஆரிய, சமண, பௌத்த சமயங்களிடையில் எத்தனை விதமான வேறுபாடுகள் இருப்பதாகக் காணப்படினும், பொதுவாக இம்மூன்று மதங்களின் முக்கியமான கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று இயைந்ததாகவே இருக்கின்றன வென்பதில் ஐயமில்லை.

சமண மதத்தை கி. மு. 599ல் அவதரித்த வர்த்தமானர் என்பவர் முதன் முதலாகத்தோற்றுவித்தார். வர்த்தமானருக்கு "மஹா வீரர்" என்ற சிறப்புப் பெயர் வழங்கிவருகிறது.

தீர்த்தங்கரர்.

ஜைனமதத்தை முதன் முதலாக இக்காட்டில் ஸ்தாபித்தவர் வர்த்தமான மஹா வீரர் என்ற சாதாரணமாகக் கருதப்படுகிறது. ஆனால் அம்மதத்தைச் சேர்ந்த வைதீகப் பிரிவினர், ஆதியில் அம்மதத்தைத் தோற்றுவித்து, அதனைப் பல வழிகளிலும் முன்னுக்குக்கொண்டுவரும் பொருட்டு அரும்பாடுபட்ட மிகவும் பிரவித்தமான ஆசாரிய பரம்பரையிலே மஹா வீரரே கடையானவர் என்று கருதுகிறார்கள். இத்தகைய ஆசாரியர்கள் தீர்த்தங்கரர் என்ற பெயரால் அழைக்கப்படுவர். இத்தகைய தீர்த்தங்கரர்களின் எண்ணிக்கை இருபத்நான்கு பேராகும். தீர்த்தங்கரர்களில் முதல் இருபத்திரண்டு பெயர்களைக் குறித்துச் சரித்திர வாயிலாக யாதொரு ஆதாரங்களும் கிடைத்தில. அவர்கள் சரித்திரபூர்வமாக உயிர்வாழ்ந்திருப்பதையறிவிக்கும் உண்மைச்சான்றுகள் நமக்குக் கிடைக்கும்வரையில், இதன் உண்மையை ஐயத்திற் கிடமின்றி விளக்குவதற்கு இயலாது. ஆனால் இருபத்திமூன்றுவது தீர்த்தங்கரர் பார்சுவநாதரைப்பற்றி யாதொரு ஐயப்பாடும் இருப்பதற்கில்லை. பார்சுவநாதரின் ஜீவியக் குறிப்புக்களும், வாழ்க்கைக் குறிக்கோளும், அவரது நடவடிக்கைகளும் நாமறிந்தவரையில் கௌதம புத்தர் மஹாவீர வர்த்தமானர் ஆகிய இருவருடைய வாழ்க்கையையும், சரித்திரங்களையும் பெரும்பாலும் ஒத்திருப்பதாகக் காணப்படுகிறது. பார்சுவநாதர் மிகுந்த சுகபோகங்களிடையே வாழ்ந்துவந்தார். தமது 30 வது ஆண்டில் துறவறம் பூண்டார். மூன்றுமாதகாலம் இடைவிடாது கடுமையாகத் தியானம் செய்து அதன்பின் உண்மையறிவைப் பூரணமான ஞான நிலையினை அடைந்தார். தமது 76-வது பிராயத்தில் மரணமடையும்வரையில், அவர் தமது கோட்பாடுகளைப் பிரசாரம் செய்வதிலேயே தமது வாழ்காட்களைக் கழித்தார். இச்சம்பவம் கி. மு. எட்டாவது நூற்றாண்டிற்கும் முற்பட்டதாயிருத்தல் வேண்டும்.

"மஹாவீரர்"—வர்த்தமானர் சரித்திரம்.

பார்சுவநாதருடைய காலத்திற்கு 250 ஆண்டுகளுக்கு அப்பால் விதேஹராஜ்யத்தின் தலைநகரான வைகாலி என்னும் பட்டணத்தைச் சேர்ந்த குண்டராமம் என்னும் ஊரில் கி. மு. 540 ஆம் ஆண்டில் வர்த்தமான மஹாவீரர் ஜனித்தார். அவருடைய தகப்பனார் சித்தார்த்தர் என்பவர் ஞாத்ரிக வம்சத்தைச் சேர்ந்த க்ஷத்ரியர்! இரண்டு செல்வவந்தர். வர்த்தமானரின் தாயார் வைசாலி நகரத்து சோக மன்னன் சகோதரியாவாள். அவளுக்குத் தரிசலா என்ற பெயர். அன்றியும் மகதராஜ்யத்தை அரசு செலுத்திவந்த பிம்பசார மன்னனும், அவனது மனைவி செல்லனை என்பவளும் அவருக்கு நெருங்கிய உறவினர். ஆதலின் வர்த்தமானர் மிகவும் செல்வமும், உயர்குடி பிறப்பும்வாய்ந்தோர் குடும்பத்தைச் சேர்ந்தவராவர்.

தனது பெற்றோர்கள் காலமடையவும், தமது முப்பதாவது பிராயத்தில் வர்த்தமானர் தன் வீட்டைத்துறந்து துறவிக்கோலம் பூண்டார். அ

கடுத்த 12 ஆண்டுகள் வரையில் அவர் கடுமையான விரதங்களையும் நியமங்களையும் மேற்கொண்டு, கடுந்தவமியற்றி, தேசமெங்கும் பிரசாரம் செய்து வந்தார்.

தமது 42-வது ஆண்டில் அவர் சுக துக்கங்களினின்றும் விடுதலைபெறும் உண்மையறிவைப்பெற்று பரிபூரணஞான நிலையினை யடைந்தார். அதுமுதல் அவரை ஜனங்கள், 'மஹாவீரர்' என்றும் 'ஜினர்' அல்லது உலகப்பற்றை வென்றவர் என்றும் அழைக்கலாயினர். இம்மொழியினின்றும், அவரது மதக் கொள்கைகளை ததழுவியவர்கள் அனைவரும் ஜைனர்கள் என்றும், நிர்க்கந்தர்கள்-அதாவது சமூக பந்த மனத்தையும ஒழித்தவர் என்றும் அழைக்கப் படுகின்றனர். அதற்குப் பின் சுமார் 30 ஆண்டளவும் தமது மதத்தை மிகவும் மும்முரமாகப் பிரசாரம் செய்துவந்தார். மகதராஜ்யத்திலும் (பீஹார்) விதேக நாட்டிலும் கோசல தேசத்திலும் அவருடைய மதத்தை ஏராளமானவர்கள் தழுவி அவருக்குச் சீடர்களானார்கள். வர்த்தமானர் தமது 72 வது வயதில் பவா என்னுமிடத்தில் தேகவியோகமடைந்தார்.

ஜைன மதத்தின் முக்கிய தத்துவங்கள்.

வர்த்தமான மஹாவீரர் பார்சுவ நாதரின் மதக் கோட்பாடுகளைக் கடைப் பிடித்து ஒழுகினாரா யினும், அதனுடைய போக்கில் இங்குமங்கும் சில முக்கியமான மாறுதல்களையும் புதிய கருத்துக்களையும் புகவிட்டார். பார்சுவநாதர் அடியிற்கண்ட நான்கு முக்கியமான தர்மங்களையே இடைவிடாது வற்புறுத்தி வந்தார்.

அவை முறையே :—(1) வாய்மை விரதம்— எப் பொழுதும் சத்தியத்தையே பேசவேண்டும்.

(2) உலகப் பொருள்கள் மீது பற்றுதல் வைக்கக் கூடாது. தனக்கென்று யாதொரு சொத்துக்கும் உரிமை பாராட்டலாகாது.

உயிருள்ள ஜீவன் ஒன்றையும் ஹிம்சிக்கக்கூடாது. களவு செய்யக்கூடாது. இந்நான்கு அடிப்படையான தத்துவங்களுடன் (5) பிரமசரிய நிலை தவறக் கூடாது என்ற ஐந்தாவது அம்சத்தையும் மஹாவீரர் சேர்த்துக்கொண்டார். தவிரவும் தன் மதத்தைச் சேர்ந்தவர்கள் ஆடைகளை யணிவதை யறவே ஒழித்து, முற்றிலும் நிகம்பர்களாக சஞ்சரிக்க வேண்டுமென்ற நூதன வழக்கத்தை யனுசரிக்கும் படியாகவும் அவர் தமது சீடர்களைக்கேட்டுக்கொண்டார்.

சமணமதத்தில் ஜாதிபேத மின்றி ஆரியனும், சூத்திரனும், மிலேச்சனும் கூடசேர்ந்து முக்திபெறலாம். என்று மகாவீரர் போதனை செய்துவந்தார். சம்சார சாகரத்தைக் கடந்து, பிறவித் துன்பத்தை யொழிக்கக் கருதினால், ஜினரையும் அவருடைய உபதேசங்களிலும் பற்றுதல் கொண்டு, நீச் செயல்களையும் தொடுமை புரிவதையும் நிறுத்தி, மனோ, வாக்கு, காயங்கள் இம்மூன்றினாலும் பாபகாரியங்களை நினையாதவனும், உலகப்பற்றுகளை அறவே ஒழித்து தரும நெறியில் நடந்தொழுக வேண்டும். சிலர் இல்லறத்தை விட்டகலாமல், அவர் போதித்து வந்த அரிய உண்மைகளை மட்டில் அனுஷ்டித்து வந்தும்; மற்றும் சிலர் துறவறம் பூண்டு தருமநெறி பற்றி யொழுகியும் அவருடைய சீடகளானார்கள். இவ்விரு வகுப்பினரும் ஒருவருக்கொருவர் துணையாக, யாதொரு மாற்சரியமுமின்றி, ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தார்கள். திகம்பராச்சாரம் வாகன் அல்லது சிரவர்கள் (கேட்போர்) என்றழைக்கப்பட்டவர், துறவரம் பூண்டவர்களுக்குப் பெரிதும் உதவி புரிந்து வந்தனர். ஜைனமதம் அஹிம்சையை மிகச் சிறந்த தர்மமாகப் போற்றிவந்ததால் அவர்களால் பிறமதஸ்தர்களுக்கு யாதொரு விதமான தீங்கும் நேரிட்டது கிடையாது.

(தொடரும்)

ஆயிரம் ரூபாய் இனம்!

தற்கால மேனாட்டுப் பூகோள சாஸ்திரத்தக்கும், புராதனமான ஜைன பூகோள சாஸ்திரத்தக்கும் (லோகாணிக்கும்) சம்பந்தப்படுத்தி ஆதாரபூர்வதம் விளக்கமாகக் கீழ்க்கண்ட கேள்விகளை விவரிப்பவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிக்கப்படும் என்று ஸ்ரீமான் ஸடா வக்கீல் ஜக்ரூப்சாஹை, என்பவர் ஜைனமித்திராவில் எழுதுகிறார்.

கேள்விகள்.

1. அமெரிக்காதேசத்தில் இரவாயிருக்கும் பொழுது சம்தேசத்தில் என் பகலாயிருக்கவேண்டும்? ஜைனசித்தாந்தத்தின்படி இவ்வித சம்பவம் விதேஹநாட்டில் நிகழ்கின்றது. இதைக்கொண்டு அமெரிக்காவை நாம் விதேஹநாடென்று கருதமுடியுமா? ஆனால் விதேஹநாட்டுவாசிகளினுடைய உயரம் 500 வில்லளவாகும். இதை எவ்வாறு விளக்குவது?

2. தென்துருவப் பிரதேசங்களில் 6 மாதம் இரவாயிருக்கையில், அதேகாலத்தில் வடதுருவப் பிரதேசங்களில் பகலாயிருக்கிறது. இவ்விரண்டு துருவங்களிலும் பகல் இரவு இக்ஷணம் மாறிக் கொண்டேவருகிறது. இதைக் குறித்து ஜைன சாஸ்திரங்களில் எங்கேனும் சொல்லப்பட்டிருக்கிறதா? சாஸ்திர ஆதாரத்துடன் விளக்கவேண்டும்.

நமது ஆகாரம்.

ஜஸ்டிஸ் வர். ராமேசத்தின் பிரசங்கம்.

சென்னை எர்பாலுசெட்டித் தெரு ரேடியெண்ட் ஹெல்த்கிளப்பில் ஜஸ்டிஸ் வர். வி. ராமேசம்செய்த ஒரு பிரசங்கத்தின் சாரம பின்வருமாறு:—ஆகாரங்களைப்பற்றியவரையில் எச்சரிக்கையும் நாம் அப்படியே அனுஷ்டிக்கக்கூடாது. நமது நிலைமைக்கு அவை சரியாக இருக்கின்றனவா என்று ஆராய்ந்தே அனுஷ்டிக்கவேண்டும். தென்னிந்தியாவில் வசிப்பவர்கள் சாதாரணமாகக் கோதுமையைச் சாப்பிடக்கூடாது. அது உஷ்ணமானது. குளிர்காலத்தில் மாத்திரம் தினம் ஒருவேளை அதைச் சாப்பிடலாம். அரிசிதான் நமக்கு விசேஷமானது. ஆனால் அதை நாம் தவறுனவழியில் தயாரிப்பதால் அதன் அனுகூலங்களை யிழந்துவிடுகிறோம். அரிசியைத்தீட்டுவதாலும் இயந்திரத்தில் நெல்லைக் குத்துவதாலும் ஜீவசத்துள்ள பாகமும் தவிடும் போய்விடுகின்றன. இவையில்லாமல் வெறும் அரிசியைச் சாப்பிடுவது பலவித வியாதிகளுக்கும் காரணமாக விருக்கிறது. ஆகையால் இவிரிருந்து உமியைமாத்திரமே நீக்க வேண்டும். நீட்டக்கூடாது, மாவுப் பண்டங்களை எண்ணெயிலோ நெய்யிலோ தயாரிக்கக்கூடாது. எனெனில் அவை ஜீரணமாவது கஷ்டம். அவல் மிகவும் கல்லது. அதில் முக்கியமானது எதுவும் கெட்டுப்போகாமலிருக்கிறது. அது சமைக்கப்படும் போது அதிகமாகக் காண்பதில்லை. இதனால் நாம் அதை அளவுக்குமேல் சாப்பிட்டுவிடக்கூடும். புழுங்கலரிசி புதிதாகவிருந்தால் சாதாரணமாக உபயோகிக்கப்படலாம். குறைந்த சூட்டிலேயே நெல் லேகவைக்கப்பட்டு உமி நீக்குமுன் இறக்கப்பட்டுவிடுவதால் விலிட்டாமின் என்பதுகூடப் போயிராது. ஸ்டார்ச்சு அதிகமாக உள்ளபொருளை அதிகம் சாப்பிடக்கூடாது. செயற்கைமூலம் பனபக்குப்பாக்கப் பட்டபொருள்களைச் சாத்தியமானவரையில் தவிர்க்க வேண்டும். வேகவைக்கப்பட்ட உருளைக்கிழங்கு பீட்ரூட் முதலியவை கல்லது. வெள்ளை சொட்டி சாக்கலேட் முதலியவை உதவாதது. பழங்களை உபயோகிக்கையில் ஆடைகளை நீக்கிவிடக்கூடாது. பழச்சாற்றில் ஆவிடும் ஆடையில் ஆல்கலியும் இருக்கின்றன. நமது ரத்தத்திற்கு இரண்டும்வேண்டும். மில்லில்குத்திய அரிசி, உடைக்கப்பட்ட பருப்புகள் இவற்றைச் சாப்பிடுகிறவர்கள் சற்று அதிகமாகவே மினரல் ஸால்டுகளை உபயோகிக்கவேண்டும். வெள்ளைச் சர்க்கரையால் நன்மையில்லை. தினம் புதிய பழங்களையும் கொஞ்சம் உலர்ந்த பழங்களையும் உபயோகித்துவந்தால் தேகத்திற்கு அவசியமான சர்க்கரை கல்லவழியில் கிடைத்துவிடும். சர்க்கரையில் தயாரிக்கப்படும் தின்பண்டங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது. வெள்ளைச் சர்க்கரை குழந்தைகளுக்கு விஷம்போன்றது. உபவாஸமிருக்கும் போது தயிற்றைச் சுத்தம்செய்ய கர்ரீலிக் சாறுதான் நிறந்தது. ஜலத்தில் இதில் கொஞ்சம் விட்டுச் சாப்பிட்டால் கல்ல பலனேற்படும். பட்டினியிருக்கும்போது பால் சாப்பிடக்கூடாது. அது ஒரு முக்கிய ஆகாரமே.

உலக செய்திகள்.

மெக்ஸிகோவில் விஷமற்ற ஒருவகைப் பாம்புகளை எலி பிடிப்பதற்காக உபயோகிக்கிறார்கள்.

* * *

மேனாட்டுப் பெண்கள் தங்கள் தொப்பிகளில் சூரியகிரஹங்களைக் கிரகிக்கும் கண்ணாடிகளை அணிகிறார்களாம். அதனால் சரீர சௌக்கியம் அதிகரிக்கிறதாம்.

* * *

ஆப்பிரிக்காவில் ஒரு அதிசயமான மரமுண்டு. உயரம் 2 அடி; சுற்றளவு 4 அடி. அதற்கு இரண்டே கொம்புகளும் கொம்பொன்றுக்கு இரண்டு இலைகளுமே யுண்டு.

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையேயுள்ள கடலில்மட்டும் சுமார் 8 கோடிபொன் பெறுமான தங்கமும் ரகைகளும் அமிழ்ந்திகிடக்கின்றனவாம்.

* * *

இத்தாலியில் பிரம்மசாரிகளிடமிருந்து வருஷிக்கும் வரிமட்டும் வருஷத்துக்கு 5 லக்ஷம் பொன்னாகிறது. பெரிய குடும்பங்கள் விசேஷப் பரிசுபெறுகின்றன.

* * *

ஒரு தபால் கடிதம் 120 நாட்களில் உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் சுற்றிவந்துவிடுமாம்.

உலகக் கோடீஸ்வரர்களில் பேர்பெற்ற திரு. ஜான். டி. ராக்பெல்லர் தமது 19-வது வயதில் வாரம் 3 ஷிலிங் சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்தாராம். அவருக்கு இப்பொழுது வயது 93.

* * *

நியூயார்க்கில் ராக்வி நடன சாலையிலுள்ள ரத்னகம்பளம் 2 டன் நிறையுள்ளது. அதை 36 பேர் இராப்பகலாய்த் தயாரித்தனராம். வால் டார்ப் ஹோட்டலிலுள்ள ஒரு ரத்னகம்பளம் அதைவிடப் பெரியதாம். அது 70 அடி நீளமும் 50 அடி அகலமும் உள்ளது. அதை 30 நிபுணர்கள் 10 மாதங்களில் தயாரித்தனராம்.

* * *

ஈரோடுக்கருகிலுள்ள காகம் என்னும் கிராமத்தில் ஒரு கோழிமுட்டையிலிருந்து 1 தலை 4 வாய்கள் 4 இரக்கைகளுடைய குஞ்சொன்று வெளிப்பட்டு உடனே இறந்தது. அத்துடன் இடப்பட்ட மற்ற முட்டைகளிலிருந்து சாதாரண குஞ்சுகளே வெளிப்பட்டன.

* * *

வெப்பீல்டில் செயற்கைப் பொன் தயாரிக்கப்படுகிறது. அதை வெள்ளைச் செம்பு விலைக்கு விற்கக் கூடுமாம். அது அலுமினியம், செம்பு இவற்றின் கலப்பால் செய்யப்படுகிறது. தீமையற்றது; சுத்தம் செய்யக்கூடியது; கடினமானது.

* * *

லண்டனில் சுமார் 40 வருஷங்களாகத் தபால் பியூனாக இருந்த ஸ்ரீ ஹான்காக் என்பவர் தமது ஓய்வு நேரங்களில் சித்திரம் எழுதப் பழகிவந்ததால் ஒரு பெரிய சித்திரக்காரராய் இப்பொழுது விளக்குகிறாராம்.

உடையாத கண்ணாடியைத் தற்போது காபோர்னியாவில் கண்டுபிடித்துள்ளார்கள். அது கன்ருக வரைகிறது. அது வெள்ளியைச் சூடாக்கும் வழியால் செய்யப்படுகிறது. மாச் சத்திலிருந்து செய்யப்படும் மற்றொரு விதக் கண்ணாடி பார்வையிலும் உபயோகத்திலும் சாதாரணக் கண்ணாடி போலவேயுள்ளது. ஆனால் அதைக் காகிதம்போல் மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொள்ளலாம்

* * *

சுமாத்ரா தீவில் 'ஹைடி' இலை என ஒரு இலை விருக்கிறதாம். ஒரு செடிக்கு ஒரே இலை. அது சுமார் 2 அடி உயரமும் ஒரு அடி அகலமும் உள்ளது.

* * *

சொல்வது பொய்யா மெய்யா எனக் கண்டு பிடிக்கும் யந்திரமொன்று லண்டனில் இருக்கிறதாம். திருடர்கள் பொய் சொல்லுகிறார்களா என்றறியப் போலீசார் இதை உபயோகிக்கிறார்களாம்.

* * *

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் என்னுமிடத்தில் வராஹமான முதலைகளை உற்பத்தி செய்து வியாபாரம் செய்கிறார்கள்.

* * *

மை ஒழுகாத பென்டன் பேனாவைக் கண்டு பிடித்ததற்காக திரு. ஜே. வில்பென் என்னும் ஆங்கிலேயர் 250,000 பொன் சன்மானம் பெற்றாராம்.

* * *

எரிமலைகள் கக்கும் தூசு காற்றின்வழியே சுமார் 500 மைல் வரை செல்லுமாம்.

பத்திரிகாசிரியர் குறிப்புக்கள்.

சாஸ்திரதானம்.

நமது ஜைன சமூகத்தில் சிறப்பாகச் சொல்லப்படும் தானங்கள் நான்கு. அவை, அன்னதானம், அபயதானம், ஔஷததானம், சாஸ்திரதானம் என நான்காம். அவற்றில், சாஸ்திரதானமாகிய மூன்றாவது தானத்தைச்செய்வோர், மக்களுக்கு இகத்தில் இன்பத்தையும், பரத்தில், பேரின்பத்தையும் அளிக்கும் நற்பேற்றைப்பெறுவர். ஆதலின், இதுவரையில் அச்சில் வெளிவராதிருந்த நூலாகிய "திருமேற்றிசையந்தாதி" என்னும் சிறந்த நூலைப் பொருளுதவிசெய்து, பிரசுரிக்கத் தமிழ்நாட்டில் சாவக சிராவகிகள் எவரேனும் முன்வருவார்களா? அங்ஙனம் முன்வருவோர் நமது ஆபீஸுக்குத் தெரிவித்தால், அவர்களுடைய சிறந்ததானத்தைப் பாராட்டிவிடுதன், பிரசுரிக்கப்படும்நூலில் அவர்களுடைய பெயரையும், போட்டோ படத்தையும் பதிப்பிக்கப்படும்.

ஒற்றைக்கிரட்டை.

நமது பத்திரிகையின் அபிவிருத்தியைக் கோரும் கனவான்களும் வாலிபர்களும், 1931ஆம் டிசம்பர்மீ 31உக்குள் ஒவ்வொரு சந்தாதாரரும் ஒன்றிரண்டு சந்தாதாரர்களை நமது பத்திரிகைக்குச் சேர்ப்பதென்னும் பேரூக்கம் கொள்வார்களானால், விவேக சக்தியின் சந்தாதாரர்களின் தொகை அதிசயிக்கத்தக்கபடி ஒற்றைக்கிரட்டையாகப்பெருகுமென்பதில் ஐயமிராது. இச்சிறந்த நற்றொண்டாற்றி நமது பத்திரிகையின் புகழுக்குப் பாத்திரமாவார்களாக. இங்ஙனம்செய்யும் அன்பர்களுடைய பெயரை அடுத்த இதழில் பிரசுரிக்க ஏற்பாடுசெய்யப்படும்.

திருமேற்றிசையந்தாதி.

நூலின் விவரத்தை இவ்விதழில் மற்றோர்பக்கத்தில் காண்க. இந்நூலைப் பிரசுரிக்க நூறு ரூபாய் செலவாகும்.

நான்கணு சந்தாசெலுத்தி தமிழ்நாடு ஜைன வாலிப சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேருங்கள்.

இச்சங்கம் தமிழ்நாடு ஜைன வாலிபருக்குக் கல்வி, சித்திருத்தம், கூட்டுறவு, வியாபாரம், கைத்தொழில், உலகியல் முதலியவைகளில் விசேஷ ஞானமும், திறமையும் அளிக்கப் பலவகையிலும் முயற்சிக்கும். தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஜைனர்களும் அடியிற்கண்ட விவரப்படி பாரம் பூர்த்திசெய்து சங்கத்தில் அங்கத்தினராகக் கோரப்படுகிறது.

1. பெயர்.....
2. தகப்பனர் பெயர்.....
3. வயது.....
4. வசிக்கும் இடம்.....
   விலாஸத்துடன்.....
   .....
5. சந்தாசெலுத்திய விவரம்.....
6. கையெழுத்து.....
   தேதி.....

To

THE SECRETARY,
Young Mens' Jaina Association,
KOLAPALUR, P. O.
(Via) Arni. (N. A. Dt.)

REGD. NO. M. 2714.

"விவேகசக்தி"க்கு வருஷம் பத்து ரூபாய் சந்தா செலுத்திப் போஷகராகச் சேர்ந்த கனவான்கள்.

1. வேதாரண்யம்—வியாபாரம், ஸ்ரீமான்-அ. ஜீ. அ. அனந்தராஜய்யன் முதலியார் அவர்கள்.
2. திருவாரூர்—ஜெனரல்மெர்ச்சண்ட், ஸ்ரீமான்-A. ஜெய பால முதலியார் அவர்கள்.
3. தஞ்சாவூர்—கருந்தட்டாங்குடி வியாபாரம், ஸ்ரீமான் நேமிநாத முதலியார் அவர்கள்.
4. குழப்பலூர்—மிராசுதார், ஸ்ரீமான்-ஜெ. துரைசாமி நயினர் அவர்கள்.
5. கும்பகோணம்—மிராசுதார், ஸ்ரீமான்-கு. சா. நாகராஜ முதலியார் அவர்கள்.

மதோத்தாரணம், பத்திரிகாபிவிருத்தி முதலியவைகளில் கருத்துடைய கனவான்களே! தக்க சமயத்தில் தோன்றிய இப்பத்திரிகைக்கு ஆதரவு கொடுக்க முன்வாருங்கள்.

மேற்குறித்த கனவான்களின் பத்திரிகாபிமானத்தைப் பின்பற்றுங்கள்.

ஜைனவாலிபர்களே!

முன்னேற்றங்கருதி ஸ்தாபித்த, தமிழ்நாடு ஜைனவாலிபர் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேருங்கள்! சங்கத்தின் தொண்டராய்ச் சேர்ந்து, "விவேகசக்தி"க்குச் சந்தாதாரர்களைச் சேருங்கள். உங்கள் சக்தி உயர்வாகுது. உங்கள் பெயரை உடனே இவ்வாபீஸுக்குத் தெரியுங்கள். உதவுகாதிர்கள்!

விவேகசக்தி ஆபீஸ்,
குழப்பலூர் போஸ்டு, ஆரணி மார்க்கம்.

தமிழ்நாடு ஜைன வாலிபர் 2-வது மஹாநாடு.

ஜைனவாலிபர் இரண்டாவது மஹாநாடு 1931ஆவ டிஸம்பர்மாத முதலில் கூடைபெற ஏற்பாடு செய்யப்படுகிறது. மஹாநாடு கூடும் இடம், தேதி முதலிய விவரங்களுக்கு அடுத்த பத்திரிகையை எதிர்பாருங்கள்.

காரியதரிசி,
தமிழ்நாடு ஜைனவாலிபர் சங்கம்,
குழப்பலூர் போஸ்டு, ஆரணி மார்க்கம்.

This Journal is published by J. Doraiswami Naicar, for the Young Men's Jaina Association Kolapalur, and is printed by C. V Appanna Chettiar, at the A. A. M. Press, Arni, (S. A. Dt.)